இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 25-05-2023

# அண்ணாமலையின் ஆகாசப்புளுகு!

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு சட்டம் கொண்டு வந்தது. அதனை எதிர்த்து பீட்டா அமைப்பு வழக்குப் போட்டது. உச்சநீதி மன்றத்தில் இரண்டு தரப்பும் வாதங்கள் வைத்து வாதாடின. தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது. இது தமிழ்நாடு அரசின் சட்டப் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகும். ஆனால், பா.ஜ.க. அண்ணாமலை, ‘இது பிரதமர் மோடிக்கு கிடைத்த வெற்றி’ என்கிறார். இங்கே, எங்கே வந்தார் பிரதமர் மோடி?!

கடந்த மார்ச் மாதம் கூட ஒன்றிய பா.ஜ.க. அரசு என்ன சொன்னது தெரியுமா? ஜல்லிக்கட்டு போன்ற போட்டிகளை நாங்கள் அங்கீகரிக்க வில்லை என்றுதான் சொன்னது. மாட்டுவண்டி பந்தயம், ஜல்லிக்கட்டுப் போட்டியை ஊக்குவிக்கும் திட்டமும் இல்லை என்றுதான் சொன்னது. பாராளுமன்ற மக்களவையில் பஞ்சாப் மாநில காங்கிரஸ் எம்.பி. ரவ்னீத் சிங், மாட்டு வண்டி பந்தயம் மற்றும் ஜல்லிக்கட்டு பற்றி கேள்வி எழுப்பி இருந்தார். பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் மாட்டு வண்டி பந்தயம் பிரபலம் என்று தெரிவித்து, நாட்டில் மாட்டு வண்டி பந்தயம் தடை செய்யப்பட்டுள்ளதா, ஜல்லிக்கட்டு போன்ற காளைகளை உள்ளடக்கிய விளையாட்டுகளை நடத்த அரசு அனுமதித்துள்ளதா என்பன போன்ற கேள்விகளைக் கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய தகவல், ஒலிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை மந்திரி அனுராக் தாக்கூர் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அவர் என்ன பதில் சொல்லி இருந்தார் தெரியுமா?

**“ஜல்லிக்கட்டு, மாட்டுவண்டி பந்தயம் உள்ளிட்ட போட்டிகளை அங்கீகரிக்கவில்லை. மாட்டு வண்டி பந்தயம், ஜல்லிக்கட்டுப் போட்டியை ஊக்குவிக்கும் திட்டமும் இல்லை.கேலோ இந்தியா உள்பட எந்தத் திட்டத்தின் கீழும் அங்கீகரிக்கவில்லை. கிராமப்புற வீரர்களை ஊக்குவிக்கும் கேலோ இந்தியா உள்ளிட்ட எந்தத் திட்டத்தின் கீழும் ஜல்லிக்கட்டு இல்லை”** என்று தெரிவித்தவர் ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் அனுராக் தாக்கூர். இதை மறைத்து தங்களை ஜல்லிக்கட்டு காவலர்களாக காட்டிக் கொள்ள நினைக்கிறார் அண்ணாமலை.

**2017 ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒரு சட்டம் கொண்டு வந்திருந்தாலோ, அல்லது ஜல்லிக்கட்டுப் போட்டியை தடை செய்திருந்த உச்சநீதிமன்றத்தில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக முறையான வாதங்களை வைத்திருந்தாலோ 2017 மெரீனா புரட்சி போராட்டம் நடந்திருக்காதே!**

**ஒவ்வொரு ஆண்டும் அனுமதி தருகிறோம் என்ற பெயரால் நாடகம் ஆடியது பா.ஜ.க. அரசு. அதே நேரத்தில் இந்திய விலங்குகள் நல ஆணையத்தை வைத்து முடிந்தவரைக்கும் ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு முட்டுக்கட்டையும் போட்டது. தடையை மீறி ஜல்லிக்கட்டு நடத்திய தமிழ் நாட்டிலும், சேவல் சண்டை நடத்திய ஆந்திராவிலும், ஆட்சியை கலைத்துவிட்டு, குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என இந்திய விலங்குகள் நலவாரியத்தின் உறுப்பினரும், வழக்கறிஞருமான என்.ஜி.ஜெய சிம்ஹு, உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்கிற்கு கடிதம் எழுதியதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.**

உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை மீறி மாநில அரசுகள் செயல்படுவது நமது ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கை எனவும், தமிழ்நாடு, ஆந்திர அரசுகளின் மீது அரசியல் சாசனத்தில் 365 பிரிவு சட்டத்தைப் பயன்படுத்தி, ஆட்சியை கலைத்து விட்டு ஜனாதிபதி ஆட்சியை உடனடியாக அமல்படுத்த வேண்டும் எனவும் 2017 ஆம் ஆண்டு அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டது யாருடைய குரல்?

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் சென்னைக் கடற்கரையில் போராடிக் கொண்டு இருந்தபோது கைகட்டி வேடிக்கை பார்த்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஜல்லிக்கட்டுப் போட்டிகளை அனுமதித்து அவசர சட்டத்தை இயற்றுங்கள் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசை தான் தமிழர்கள் வலியுறுத்தினார்கள். தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் நெருங்கி வருகிறது, அதற்குள் முடிவெடுங்கள் என்று கேட்டார்கள். அப்போது ஒன்றிய சுற்றுச் சூழல் அமைச்சர் அனில் மாதவ் அவர்களிடம் நிருபர்கள் கேட்டார்கள். ‘ஒன்றிய அரசு அவசர சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் கோரிக்கை வைக்கிறார்களே? எப்போது நிறைவேற்றப் போகிறீர்கள்?’ என்று கேட்டார்கள். அப்போது, ‘எங்கள் கைகள் கட்டப்பட்டுள்ளன’ என்று சொன்னவர்தான் பா.ஜ.க. அமைச்சர்.

“இந்தவழக்குஉச்சநீதிமன்றத்தில்இருக்கிறது. வழக்குநீதிமன்றத்தில் இருக்கும் போது எங்களால் எதுவும் செய்ய முடியாது” என்று சொன்னார் பா.ஜ.க. அமைச்சர்.

“ஜல்லிக்கட்டு விஷயத்தில் உங்கள் நிலைப்பாடு என்ன?” என்று நிருபர்கள் கேட்டார்கள். “இன்றோ, நாளையோ தீர்ப்பு வெளியானதும் எங்களது நிலைப்பாட்டை அறிவிப்போம்” என்று சொன்னவர்தான் பா.ஜ.க. அமைச்சர். தீர்ப்பு வெளியான பிறகு இவர் நிலைப்பாட்டை அறிவித்தால் என்ன, அறிவிக்காமல் போனால் என்ன? ‘ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக ஒன்றிய அரசும் இருக்கிறது’ என்பதை உச்சநீதிமன்றத்தில் முன் வந்து சொன்னால்தானே அது பா.ஜ.க.வின் உறுதியான நிலைப்பாடாக இருக்க முடியும்? இருந்திருக்க முடியும்?

இப்போது உச்சநீதிமன்றம் ஆதரித்து தீர்ப்பளித்து விட்டதும் வேறு வழியில்லாமல் ஆதரித்தாக வேண்டிய நெருக்கடி பா.ஜ.க.வுக்கு வந்து விட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான 27 சதவிகித இடஒதுக்கீட்டை முடிந்த வரை எதிர்த்து பார்த்தார்கள். 27 சதவிகிதமோ, 50 சதவிகிதமோ எதையும் தர முடியாது என்று உச்சநீதிமன்றத்தில் முதலில் வாதிட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. எதிர்ப்புகள் வந்ததும் பணிந்தது பா.ஜ.க. அரசு. உச்சநீதிமன்றம் அதற்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப் போகிறது என்றதும் ஆதரித்து விட்டார்கள். இப்படித்தான் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்துவதிலும் பா.ஜ.க. நிலைப்பாடு ஆகும்.

●●

## ஆவடியில் தெருமுனைக் கூட்டம்!

திருவள்ளூர், மே 25-
திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி வடக்கு பகுதி தி.மு.க இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் ஆவடி அடுத்த அண்ணா நகரில் பகுதிச் செயலாளர் ஆவடி ஜி.நாராயண பிரசாத் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு. நாசர் தமிழ்நாடு கொறடா கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இதில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதய குமார், மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், தலைமை செயற் குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், சி. ஜெரால்டு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.5.2023) சிங்கப்பூர் நாட்டின் கேப்பிட்டா லேண்ட் (Capita Land) நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் சஞ்சீவ் தாஸ்குப்தா அவர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் செய்வது குறித்து ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களின் சொத்துக்குவிப்பு வழக்கை திசை திருப்ப முயற்சி!
### தொழில் முதலீடுகள் பெற்று தமிழ்நாட்டில் வேலைவாய்ப்புகளை உருவாக்கச் சென்றுள்ள

# முதல்வரின் வெளிநாட்டுப் பயணம் பற்றி அவதூறு பரப்புவதா?

## ஊழலின் ஒட்டுமொத்த உருவம் பழனிசாமிக்கு தி.மு.க.வை குறை கூறத் தகுதியில்லை; அமைச்சர் தங்கம் தென்னரசு கடும் பதிலடி!

**சென்னை, மே 25-**

**அ.தி.மு.க. ஆட்சியின் ஊழல்களை மறைக்க முன்னாள் அமைச்சர்கள் மீதான சொத்துக்குவிப்பு வழக்கைத் திசைதிருப்ப தொழில்முதலீடு பெற்று, வேலைவாய்ப்புகளை தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு உருவாக்கச் சென்றுள்ள முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணம் பற்றி அவதூறு பரப்புவதா? என நிதியமைச்சர் தங்கம் தென்னரசு எடப்பாடி பழனிசாமிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**



“முதலீட்டை ஈர்க்கப் போகிறாரா அல்லது முதலீடு செய்யப் போகிறாரா?” என்று தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக முதலமைச்சர் சென்றுள்ள 9 நாள் வெளிநாட்டுப் பயணத்தை கொச்சைப்படுத்தியிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அ.தி.மு.க. ஆட்சியில் தொழில் வளர்ச்சியை காலில் போட்டு மிதித்து, வர விரும்பிய தொழில் நிறுவனங்களையும் அண்டை மாநிலங்களுக்கு விரட்டி விட்டு ஆட்சி நடத்தியவர் எடப்பாடி பழனிசாமி. நான்காண்டு கால ஆட்சியில் “ஊரெங்கும் ஊழல்” என்ற முழக்கத்திற்கு சொந்தக்காரராக கரன்சி மழையில் நனைந்து ஊழலின் ஒட்டுமொத்த உருவமாகத் திகழ்ந்த எடப்பாடி பழனிசாமி, வெளிப்படைத் தன்மையோடு நடைபெறும் தி.மு.க. ஆட்சி மீது ஊழல் புகார் கூறுவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்ற கேள்வியை இன்று தமிழ்நாடே கேட்கிறது.

### தமிழ்நாட்டை போதை மாநிலமாக மாற்றிய எடப்பாடி பழனிசாமி!

தினமும் “எதைத் தின்றால் பித்தம் தெளியும்” என்ற பாணியில், முதன் முதலில் டாஸ்மாக் கடையைத் தெருவெல்லாம் திறந்த அ.தி.மு.க. ஆட்சியை மறந்துவிட்டு - அ.தி.மு.க. ஆட்சியில் கொத்துக் கொத்தாக கள்ளச்சாராயச் சாவுகள் அரங்கேறியதை வசதியாக மறைத்து, 4 ஆண்டுகள்ளச்சாராயம், குட்கா எனத் தமிழ்நாட்டை போதை மாநிலமாக மாற்றிய எடப்பாடி பழனிசாமி தி.மு.க. ஆட்சி பற்றி குறை கூறுகிறார். முதலமைச்சர் வெளிநாடுகளுக்கு முதலீடு பெறப் போகிறார் என்பதைத் தெரிந்து கொண்டு அதற்கு முதல் நாள் ஒரு பேரணியை நடத்தி சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என ஒரு அரைவேக்காட்டுப் புகார் கொடுக்கிறார். பொள்ளாச்சியில் இளம் பெண்கள் கதறியபோது கண்ணை மூடிக் கொண்டு இருந்தவர் பழனிசாமி; அமைதியாக அறவழியில் போராடிய ஸ்டெர்லைட் போராட்டக் குழுவினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி 13 பேரை காக்கை குருவிகள் போல் சுட்டுத்தள்ளி விட்டு, நான் டிவியில் பார்த்து தெரிந்து கொண்டேன் என்று பொய் சொன்னவர் பழனிசாமி; தனது துறையின்கீழ் பணியாற்றும் பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகள் மீதான பாலியல் புகார்களையே வேடிக்கை பார்த்தவர் இந்தப் பழனிச்சாமி என்பதுதான் வரலாறு.

“துப்பாக்கிச்சூடு” எடப்பாடி பழனிச்சாமிக்குத் தெரிந்தே நடந்தது என்பதை துப்பாக்கிச் சூடு பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணை கமிஷன் அறிவித்து, “பச்சைப் பொய் பழனிசாமியின் முகத்திரையை கிழித்து எறிந்துள்ளதை ஏனோ எதிர்க்கட்சித் தலைவர் வசதியாக மறந்துவிட்டு, இன்று தனது உட்கட்சி பிரச்சினையைத் திசை திருப்ப, தனது அமைச்சரவை சகாக்கள் இருவர் மீது சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றப்பத்திரிகையே தாக்கல் செய்யப்பட்டு விட்டதை மக்கள் மனங்களில் இருந்து மறைக்க “பேரணி” “புகார்” “அறிக்கை” என விட்டு நீலிக் கண்ணீர் வடிக்கிறார்.

### பழனிசாமி வெளிநாடுகள் சென்றது முதலீடு செய்யத்தானா?

“முதலீடு” என்றால் தனக்குக் கிடைக்கும் ஊழல் பணம் மட்டுமே என அகராதியில் புதிய அர்த்தம் கண்டுபிடித்த பழனிச்சாமி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடுகளை பெறப் போகும் முதலமைச்சர் மீது அவதூறு பேசுகிறார். அந்த அளவிற்கு அவருக்கு பொறாமையும்எரிச்சலும்மனதிற்குள்கோடை வெயிலை விட அனலாக கக்குகிறது. 13 நாள் பயணமாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு எடப்பாடி பழனி சாமி செல்வதற்கு முன்பு அவரது மகன் மிதுன் அங்கு போனது பழனி சாமியின் ஊழல் பணத்தை முதலீடு செய்வதற்குத்தானோ என்ற கேள்வி இப்போது எழுகிறது.

> **“முதலீடு” என்றால் தனக்குக் கிடைக்கும் ஊழல் பணம் மட்டுமே என அகராதியில் புதிய அர்த்தம் கண்டுபிடித்த பழனிச்சாமி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடுகளை பெறப் போகும் முதலமைச்சர் மீது அவதூறு பேசுகிறார். அந்த அளவிற்கு அவருக்கு பொறாமையும் எரிச்சலும் மனதிற்குள் கோடை வெயிலை விட அனலாக கக்குகிறது. 13 நாள் பயணமாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு எடப்பாடி பழனிசாமி செல்வதற்கு முன்பு அவரது மகன் மிதுன் அங்கு போனது பழனிசாமியின் ஊழல் பணத்தை முதலீடு செய்வதற்குத் தானோ என்ற கேள்வி இப்போது எழுகிறது.**

அ.தி.மு.க.வின் அமைச்சரவையையே ஒவ்வொருவராக வெளிநாடுகளுக்குஅனுப்பிஉலகமுதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கிறேன் என்று கபட நாடகம் நடத்திச் “சுற்றுலா” சென்றது ஊழல் பணத்தை வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்குத்தானா?

இன்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளிநாடு சென்றுள்ளது பற்றி அவதூறு பரப்பும் எடப்பாடி பழனிசாமி, தனது மகனும், அவரது அமைச்சரவை சகாக்களும் ஏன் சென்றார்கள்என்பதைவிளக்குவாரா?

### கொடநாடு சம்பவ மர்மங்கள் விலகும்போது பழனிசாமியின் உண்மை முகம் தெரியும்!

கொடநாடு கொலை மற்றும் அங்கு நடைபெற்றதாக கூறப்பட்ட தற்கொலைக்கு அடையாளமாக இருந்த மரத்தை வெட்டி சாட்சியங்களை மறைத்தது போன்ற மர்மங்கள் விலகும்போது எடப்பாடி பழனிசாமியின் உண்மை முகம் தெரிய வரும் என்பதில் சந்தேகமில்லை!

அதுவரை அவதூறுகளை முதலீடுகளாக வைத்து அசிங்கமான அரசியல் செய்யாமல் இருப்பது எடப்பாடி பழனிசாமிக்கு நல்லது.

2015ஆம் ஆண்டும் அ.தி.மு.க. ஆட்சியில் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஒரு “அ.தி.மு.க. மாநாடு”! எடப்பாடி பழனிசாமி இருந்த போது நடத்திய 2019ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு எடுபடாத மாநாடு!

போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எனக் “கணக்கு” காட்டப்பட்டதே தவிர, வந்த முதலீடுகள் எவ்வளவு என்று நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு பார்த்தால் எடப்பாடி பழனிசாமியின் நிர்வாக லட்சணமும், அவர் முதலீட்டை ஈர்த்த மாயத்தோற்றமும் வெட்ட வெளிச்சமாகி விட்டது. இதனைத் தொழில்துறை அமைச்சராக இருந்த நான் பல முறை சுட்டிக்காட்டியிருக்கிறேன். உலக முதலீட்டாளர்கள் மாநாடு என்ற பெயரில் எடப்பாடி பழனிசாமி நடத்தியது உலகச் சுற்றுலா மாநாடு!

### தி.மு.க. ஆட்சிக்கு வந்ததிலிருந்து முதல்வர் எடுத்து வரும் தொடர் முயற்சிகள்!

எங்கள் முதலமைச்சர் அப்படி இல்லை. அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டு காலம் சீரழிந்த நிர்வாகத்தை சீர்படுத்தி வருகிறார் . படுபாதாளத்தில் விழுந்து கிடந்த நிதி நிலைமையை சரி செய்து வருகிறார். சட்டம் ஒழுங்கிற்கு சவால் விடும் எந்த விவகாரத்தையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு, தவறு செய்வோர் யாராக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கிறார். ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து தொழில் தொடங்க “முதலீடு பெறுவதை” ஒரு முழு முயற்சியாகவும் புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதை தினசரிப் பணியாகவும் செய்து வருகிறார்.

இப்போது ஜனவரி 2024 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடச் செல்லும் முன்பு, துபாய் போன போது எவ்வளவு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், எவ்வளவு முதலீடுகள் பெறப்பட்டுள்ளது என்பதை பட்டியலிட்டுள்ளார். ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு 9 நாள் பயணமாகப் புறப்படும் முன்பு பத்திரிகைக் குறிப்பு வாயிலாகவும், விமான நிலையத்தில் பேட்டி வாயிலாகவும், இதுவரை தொழில் துறையில் பெற்ற முதலீடுகள் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவற்றை வெளிப்படையாக அறிவித்து விட்டுச் சென்றுள்ளார்.

ஆனால் இது எதையுமே படிக்காத எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்கும், தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தவும் நாள்தோறும் உழைக்கும் முதலமைச்சரைப் பார்த்து தரக்குறைவாக அவதூறாக கீழ்த்தரமாகப் பேசி அரசியல் நாகரிகத்திற்கும் தனக்கும் ஆயிரம் மைல் தொலைவு என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

### கூவத்தூர் கூத்தில் முதல்வரான பழனிசாமி!

எடப்பாடி பழனிசாமி யார் காலில் விழுந்து கும்பிட்டுப் பதவி பெற்றார். பிறகு விழுந்தவர் காலையே எப்படி வாரி விட்டார். “விபத்தில்” முதலமைச்சரான அவர் அப்பதவியை தக்க வைக்க நடத்திய “கூவத்தூர் கூத்து”; அங்கு நடந்த அருவருப்பான நடனங்கள், எம்.எல்.ஏ.க்கள் சுவர் ஏறித் தப்பி ஒடும் காட்சிகள், ஆம்னி பேருந்துகளில் அடைத்து எம்.எல்.ஏ.க்களைக் கொண்டு வந்து நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றது என அனைத்திலும் “கரன்சி பெட்டிகளை” கொடுத்து, தங்கக் கட்டிகளையும் கொடுத்தார் என்ற செய்திளைப் படித்து அப்போதே ஒட்டுமொத்த தமிழ்நாடும் காறித் துப்பியதை ஏனோ எடப்பாடி பழனிசாமி மறந்து விட்டார்.

முதலமைச்சர் பொறுப்பைத் தக்க வைக்கப் பணம்; ஓ.பி.எஸ் தகராறில் பொதுக்குழுவைக் கூட்டப் பணம்; அதில் மெஜாரிட்டி உறுப்பினர்களைப் பெறப்பணம்; வேண்டியதீர்மானத்தை நிறைவேற்றப் பணம்; எல்லாவற்றையும் விட, பொதுச் செயலாளர் பதவியைப் பெற “பெட்டி பெட்டியாக” பணம் என கட்சி அரசியலையும், அசிங்கமாக அவர் ஆட்சியில் விட்ட “கான்டிராக்ட் ஊழல்” அரசியல் போல் நடத்திப் பதவியைப் பெற்று, பவனி வந்து கொண்டிருக்கும் எடப்பாடி பழனிசாமிக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தை, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறும் தி.மு.க. ஆட்சியை, திராவிட மாடல் முதலமைச்சரைப் பற்றி குறை கூற தகுதியும் இல்லை. தார்மீக உரிமையும் இல்லை.

### பழனிசாமியின் ஊழல் விரைவில் தெரியவரும்!

இப்போது இரு முன்னாள் அமைச்சர்கள் மீதான சொத்துக்குவிப்பு வழக்கு குற்றப்பத்திரிகையாகத் தாக்கல் செய்யப்பட்டு விட்டது. அடுத்தடுத்து முன்னாள் அமைச்சர்கள் மீதான சொத்துக்குவிப்பு வழக்குகளில் மட்டுமல்ல, பழனிசாமியின் ஊழல் மீதும் சட்டம் தன் கடமையைச் செய்யும். நீதிமன்றப் படிக்கட்டுகளை எண்ண வேண்டியவர்கள், தங்கள் ஆட்சி ஊழலை மறைக்க இதுபோன்ற அவதூறு பரப்பும் வேலைகளில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். எடப்பாடி பழனிசாமி பாணியிலேயே நாங்கள் பேசத் தொடங்கினால், ஒரு நாள் கூட அவர் நிம்மதியாக இருக்க முடியாது என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.